1979 பிப்ரவரி 24]

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவரவர்களே, மின் அழுத்தக் குறைவின் காரணமாக தென் மாவட்டங்களில் விவசாயிகள் தங்கள் பம்புசெட்டு ஓடவில்லை என்றும் கூறுவதும், மோட்டார்களில் காயல் பொய்த்துப் போவதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள் என்பதும் இந்த அரசுக்குத் தெரியுமா? அதனை நீக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தனிக் கேள்வி போடவும்.

வினா எண். 159— திரு. டி. ஆர். இராசாராம் ரெட்டி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதியில் மயிலம் ஒன்றியம் பேரணி கிராமத்தில் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் தொடர்பு பெற 1972-ல் ஸ்டாம்பு அக்ரிமெண்ட் செய்து இருந்தும் நாளது வரை மின் தொடர்பு தராமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—(அ) ஆம்.

(ஆ) இப்பகுதியில் 56 பேருக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம் 1971–72-ல் அனுமதியாகியும், போதிய அளவு மனு தாரர்கள் தயார் நிலையில் அப்போது இல்லாதிருந்ததால் மின் இணைப்பு வழங்க இயலவில்லை. தற்போது, திட்டம் மறு மதிப்பீடு செய்து 68 பேர்களுக்கு மின் இணைப்பு வழங்கும்திட்டம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் முன்னர் அனுமதி வழங்கப் பட்ட 56 பேர்களும் உள்ளனர்.

திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி ; இப்பொழுதுகூட— இன்று வரை எந்தவிதமான வேலையையும் துவக்கவில்லை. 1972-லேயே அக்ரிமென்ட் செய்து சுமார் 7 வருஷமாகிவிட்டது. அதனால் துரிதமாக வேலையைத் துவக்கித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. வேலைகள் துரிதமாக நடைபெற மின் வாரியத்திற்கு ஆணை அனுப்பப்படும்.